**தலைப்பு 279 – கேகாலை மாவட்ட செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 279 – கேகாலை மாவட்ட செயலகத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 யூன் 22 ஆம் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

---

மாவட்ட செயலகத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்தத் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 832.00 மில்லியனாக இருந்ததுடன், அதில் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 779.82 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், மாவட்ட செயலகத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 52.18 மில்லியன் அதாவது 6.27 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 636.00 | 624.35 | 11.65 | 1.83 |
| மூலதனம் | 196.00 | 155.47 | 40.53 | 20.68 |
| மொத்தம் | 832.00 | 779.82 | 52.18 | 6.27 |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளின் பயன்பாடு**

பல்வேறு செயற்பாடுகளுக்காக மாவட்ட செயலகத்திற்கு 27 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் 17 திணைக்களங்களினால் ரூபா 2,069 மில்லியன் கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் அதில் ரூபா 1,812 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டில் ரூபா 257 மில்லியன் அதாவது 12 சதவீத நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

மாவட்ட செயலகத்திற்குரிய 27901 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள படியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 42.00 | 41.74 | 32.00 | 39.96 | 145.00 | 136.48 |

## 2.3 பொது வைப்புக் கணக்குகள்

மாவட்ட செயலகத்தின் கீழுள்ள 04 வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 522.95 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0002/0067/000 | 24.93 |
| 6000/0000/00/0013/0037/000 | 76.64 |
| 6000/0000/00/0017/0004/000 | 37.40 |
| 6000/0000/00/0016/0019/000 | 383.98 |
| மொத்தம் | **522.95** |

## 2.4 கணக்காய்வு அவதானிப்பு

கேகாலை மாவட்ட செயலகத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

# 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

## 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

### பாதீட்டு முரண்கள்

03 செலவின விடயங்களுக்காக மிகை நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 11.9 சதவீதம் முதல் 35.5 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

## 3.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்ட நிதியேற்பாட்டைப் பயன்படுத்துதல்

மீளாய்வாண்டில் 12 அமைச்சுக்களிலிருந்தும் 10 திணைக்களங்களிலிருந்தும் பல்வேறு பணிகளுக்காக மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்பு தேறிய நிதி ஏற்பாட்டில் 11 சதவீதம் முதல் 67 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

## 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

27901 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தருக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 433,613 ஆக இருந்ததுடன், அந்த நிலுவை மீதிகள் 04 வருட காலமாகக் கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு மாவட்ட செயலகம் தவறியிருந்தது.

**3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**3.4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மாவட்ட செயலகத்தால் மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்**

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் விரிவானதொரு பெறுகைகள் திட்டமொன்று மீளாய்வாண்டிற்காக மாவட்ட செயலகத்தால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

2002 செப்தெம்பர் 12 ஆம் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மாவட்ட செயலகத்தால் நிதியாண்டு முடிவடைந்து 150 தினங்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான அந்த அறிக்கை 2017 யூன் 23 ஆம் திகதி வரையிலும் மாவட்ட செயலகத்தினால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை** | | |
| XIX ஆம் அத்தியாயத்தின் 1.1 மற்றும் 6.2 ஆம் உப பிரிவுகள் | 160,776 | எதாவது பதவியொன்றில் அல்லது தரத்திற்கு ஒதுக்கப்பட்ட நிரற்படுத்தப்பட்ட இல்லம் அந்த பதவியில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தருக்காக ஒதுக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2000 ஆம் ஆண்டின் போது ஏனைய வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்த கேகாலை மேலதிக மாவட்ட செயலாளர் உத்தியோகபூர்வ இல்லம் 2017 யூன் 16 ஆம் திகதி மீண்டும் குறித்த உத்தியோகத்தருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எனினும் 2017 மே மாதம் வரை அந்த அரசாங்க இல்லத்திற்காக அறிவட வேண்டிய வீட்டு வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| **(ஆ)** | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை<br>---------------------------------------------------- | | |
| | நிதிப் பிரமாணம் 703(2)(ஆ) | 1,267,157 | நிதிப் பிரமாணத்திற்கு முரணாக கிவுல்தெனிய எக்கமுத்துகம விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்யும் வேலை உப ஒப்பந்தத்திற்கு வழங்கப்பட்டு நிறைவேற்றப்பட்டிருந்தது. |
| **(இ)** | பாதீட்டுச் சுற்றறிக்கை<br>------------------------------------ | | |
| | 2016 சவனரி 06 ஆம் திகதிய BD/GPS/130/9/14 MC-III ஆம் இலக்க கடிதம் | 2,512,260 | வெளிக்கள உத்தியோகத்தர் மோட்டார் சைக்கிள் உரித்தற்ற பதவியொன்றிற்கு நியமிக்கப்படும் போது, சேவையிலிருந்து அகற்றும் போது, சேவையை கைவிடும் போது மற்றும் குறித்த காலத்திற்கு முன் ஓய்வு பெற்றுச் செல்லும் போது அவருக்கு வழங்கப்பட்டுள்ள மோட்டார் சைக்கிளுக்காக அதன் சந்தைப் பெறுமதி அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் 04 பிரதேச செயலகங்களில் 18 உத்தியோகத்தர் தொடர்பாக அதன்படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

**3.6 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்**

------------------------------------------------------------------------------------------------

செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படாது கைவிடல், செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாது கைவிடல் மற்றும் செயற்திட்ட தாமதங்கள் தொடர்பான தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாது கைவிடல்**

------------------------------------------------------------------------------------

மாவட்ட செயலகத்தின் புதிய கட்டிடம் ரூபா 294,982,342 தொகையான மதிப்பீட்டுக் கிரயத்தில் நிர்மாண நடவடிக்கைகள் 2011 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு 2014 மே 10 ஆம் திகதியளவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதற்காக 2016 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 77,119,833 தொகை செலவிடப்பட்டிருந்தது. நிர்மாண நடவடிக்கைகளிலிருந்து 10 சதவீத வேலைப் பகுதி மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தகாரரினால் நிர்மாண செயற்பாடுகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. இந்தக் கட்டிடத்தின் தரை மாடியின் நடுவில் வெடித்திருந்ததுடன் கட்டிடத்தின் முன்பக்கமும் பின்பக்கமும் ஏறும் படிகளுக்காக கட்டப்பட்டிருந்த சகல கம்பிகளும் தூருப்பிடித்திருந்தன.

**3.7 செயலாற்றல்**

--------------------

**போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

------------------------------------------------------------------------------------------

2016 ஒக்தோபர் மாத்தின் போது கேகாலை மாவட்டத்தில் இடரொன்றின் காரணமாக பாதிப்பிற்குள்ளாகிய சப்ரகமுவ மாகாண சபையின் 37 வீதிகளை மீளமைப்பதற்காக குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டின் மூலம் ரூபா 100 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அந்த நிதி ஏற்பாடுகளில் மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 20,715,000 தொகையான 07 வீதிகளின் நிர்மாண நடவடிக்கைகள் கூறுவிலை

கிடைக்கப்பெறாமையினால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 33,493,305 தொகையான மேலும் 11 வீதிகளின் நிர்மாண நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கான காலம் போதியளவில் இல்லாமையினால் 2017 ஆம் ஆண்டிற்கான தொடர் வேலையாக்கப்பட்டிருந்தது.

**3.8 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

-----------------------------------------------------------------------------------------

மாவட்ட செயலகத்தால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய வடிவிலானதாக இருந்தன. தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) வறக்காபொல பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த கிவுல்தெனிய எக்கமுத்துகம விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்யும் வேலையை நிறைவேற்றுவதற்காக அந்த சபையினால் கிவுல்தெனிய கிராமிய சமுர்த்திச் சங்கத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அந்த வேலையை முன்மொழிவதற்கு முன்னர் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வுத் திகதியான 2017 பெப்ரவரி 09 ஆம் திகதியளவில் செயற்திட்டம் முழுமையாக நிறைவேற்றப்பட்டதாகக் கருதி ரூபா 1,267,157 தொகை செலுத்தப்பட்டிருந்த போதும், விளையாடுவதற்கு முடியுமான வகையில் விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டிருக்கவில்லை. இந்த வேலையை நிறைவேற்றும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) உடன்படிக்கையின் 07 ஆவது பிரிவின் பிரகாரம் மூன்றாம் தரப்பிற்குரிய ஆதனங்களில் ஏற்படுகின்ற நட்டத்தை நல்ல நிலைக்கு கொண்டுவர வேண்டியிருந்தபோதிலும் இந்த நிர்மாணங்களின் காரணமாக மூடப்பட்டுச் சென்ற குடிநீர் பெறும் கிணறு மற்றும் வாய்க்கால் வீதி என்பன முன்னைய நிலைக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ii) நிர்மாணத்தின் 04 வேலை விடயங்களுக்குரிய வேலைகள் குறித்த அளவினை விட ரூபா 384,344 குறைவாகவும், ஒரு வேலை விடயத்திற்குரிய ரூபா 18,060 தொகையான வேலை முழுமையாகவும் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் மேலும் 02 வேலை விடயங்களுக்குரிய வேலைகள் அங்கீகரிக்கப்பட்ட அளவினை விட அதிகமாகவும் நிறைவேற்றப்பட்டமையினால் ரூபா 737,850 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(iii) காணி மீளமைத்தல் ஆணைக்குழுவிற்குரிய காணியிலிருந்து விளையாட்டு மைதானத்தை நிரப்புவதற்காக மண் பெறப்பட்டிருந்த போதிலும் அதற்காக எழுத்துமூல அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

(iv) வேலை விடய இலக்கம் 06 இன் கீழ் வீதி நிர்மாணங்கள் தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்கள் (HSR) பூர்த்தி செய்யப்படாதிருக்கும் போது மண் வழங்கி போக்குவரத்துச் செய்வதற்காக 1 கியூப்பிற்கு ரூபா 3,000 வீதம் 364 மண் கியூப்பிற்காக ரூபா 1,092,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(v) விளையாட்டு மைதானத்திற்காக நிரப்புவதற்குத் தேவையான மண்ணின் அளவு 120 கியூப் என மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் இறுதி விலைப்பட்டியல் தயாரிக்கும் போது பயன்படுத்தப்பட்ட மண்ணின் அளவு 364 கியூப்களாக காண்பிக்கப்பட்டு விலைப்பட்டியல் தயாரிக்கப்பட்டிருந்தது. மேலும் வழங்கப்பட்ட மண்ணின் அளவு தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட்ட அளவிடை அறிக்கையும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) விளையாட்டு மைதானத்தின் 140 அடி நீளமான பக்கச் சுவர் நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அது 76 அடி வரை குறைக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(ஆ) தெரணியகல பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் அகதிகளைக் குடியமர்த்துவதற்காக தெரிவு செய்யப்பட்ட மலன்தெனிய காணிக்கு உட்செல்லும் வீதி மற்றும் அதன் உள்ளக வீதிகளை நிர்மாணிப்பதற்காக இடர் முகாமைத்துவ அமைச்சினால் வீதியின் 1,146 கனமீற்றர் தூர அளவை வெட்டுதல் மற்றும் 37.57 கன மீற்றர் அளவான வீதிக்கு கொங்கிறீட் இடல் என்பவற்றுக்காக ரூபா 779,393 நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அதன் சகல நடவடிக்கைகளும் 6 நாட்களான குறுகிய கால வீச்சில் நிறைவேற்றுவதற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. 390 அடி நீளத்திற்கு வீதி மாத்திரம் கொங்கிறீட் இடப்பட்டிருந்தது. அந்த வீதியின் பௌதீக பரிசோதனையின் போது கொங்கிறீட் கலவை நலிவாக இருந்த இடங்களும், கொங்கிறீட் தட்டின் மேற்பகுதி உடைந்து செல்லுதல் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீதியின் இருபக்கமும் உள்ள ஓரங்களிற்கு மண் இட்டு நிரப்பப்பட்டிராத சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன. வீதிகளிற்கு கொங்கிறீட் இடுவதற்கான வேலை மதிப்பீடு ரூபா 558,671 இற்கு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தம் ரூபா 535,593 இற்கு கையளிக்கப்பட்டிருந்தது. எனினும் கொடுப்பனவு செய்யும் போது ஒப்பந்தப் பெறுமதி ரூபா 120,944 இனால் வீழ்ச்சி ஒப்பந்தகாரருக்கு ரூபா 656,537 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் வீதியின் ஆரம்பப்பகுதி மிகவும் கவனமில்லாமல் தயாரிக்கப்பட்டிருந்தமையால் உயிர்களுக்கும் ஆதனங்களுக்கும் ஆபத்தான நிலையொன்று காணப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டது.

**3.9 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---

மாவட்ட செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தது. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) தெரணியகல பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் விளையாட்டுத்துறை அமைச்சின் நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தி ஒயனவிட்ட வத்த சக்தி விளையாட்டரங்கை அபிவிருத்தி செய்வதற்கு ரூபா 418,034 தொகை மற்றும் உடபாகே வத்த காந்தி நகர் விளையாட்டரங்கை அபிவிருத்தி செய்வதற்கு ரூபா 395,660 தொகையும் செலவிடப்பட்டிருந்தது. எனினும் இந்த விளையாட்டு மைதானம் விளையாடுவதற்கு ஏற்றவகையில் தயாரிக்கப்பட்டிராமையினால் நிதி ஏற்பாட்டை வழங்கியதன் நோக்கத்தை நிறைவேற்ற முடியாதிருந்தது.

(ஆ) இடர் முகாமைத்துவ அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த ஏற்பாட்டின் கீழ் பக்குல்வல பாடசாலை அருகாமையிலிருந்து அகதிகளைக் குடியமர்த்தும் காணி வரை நுளைவு வீதியை நிர்மாணிப்பதற்காக தனியார் ஒப்பந்தகார நிறுவனத்தினால் ரூபா 6.1 மில்லியனுக்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. உரிய மதிப்பீட்டில் ரூபா 1 மில்லியனுக்கு உடன்பட்ட பட்டியல் இலக்கம் 2 இன் கீழுள்ள வேலைப்பகுதி நிறைவேற்றப்பட்டிராததுடன் 20 வேலை விடயங்களில் உடன்பட்ட அளவை விட குறைவாக நிறைவேற்றப்பட்டிருந்தது. ஒரு வேலை விடயத்தின் மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட அளவை விட கூடுதலாக நிறைவேற்றப்பட்டதன் காரணமாக ரூபா 1,021,202 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் இந்த வீதியை நிர்மாணிக்கும் போது பாடசாலையின் குடிநீர் கிணற்றுக்குச் செல்லும் வீதி நெருக்கடிக்குள்ளாகின்றமை மற்றும் காணப்பட்ட வேலி அகற்றப்பட்டமை என்பன இடம்பெற்றிருந்த போதிலும் அதனை மீள அமைத்துத் தருவதற்கு ஒப்பந்தகாரரால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 மற்றும் 2014 ஆண்டுகளில் மாவட்ட செயலகத்தின் மின்சார தேவையினைப் பூர்த்தி செய்வதற்கு ரூபா 4,240,000 தொகையில் தனியார் கம்பனியொன்றிலிருந்து 28 பெனல்களையும் 30 பெனல்களையும் உடைய இரண்டு சூரிய சக்தி முறைமை

பொருத்தப்பட்டிருந்த போதிலும் அதில் ஒரு முறைமைக்குரிய 2 பெனல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் அந்த பெனல் பொருத்தப்பட்டமையால் எதிர்பார்க்கப்பட்ட மின்சாரம் வழங்கும் நோக்கத்தை அடைய முடியாதிருந்தது.

**3.10 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 43 | 39 | 04 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 30 | 21 | 09 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 1,048 | 974 | 75 | 01 |
| (iv) | ஆரம்ப நிலை | 118 | 104 | 26 | 12 |
| | மொத்தம் | 1,239 | 1,138 | 114 | 13 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புளத்கொஹுபிட்டிய பிரதேச செயலத்தில் கணக்காளர் பதவி 2014 செப்தெம்பர் 01 ஆம் திகதியிலிருந்தும், தெரணியகல, அறநாயக்க மற்றும் றுவன்வெல்ல பிரதேச செயலகங்களில் மொழி பெயர்ப்பாளர் பதவி 2014 ஆம் ஆண்டிலிருந்தும், தெரணியகல பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் பதவி 2014 ஏப்ரல் 17 ஆம் திகதியிலிருந்தும் வெற்றிடமாகக் காணப்பட்டன. அந்த நிலைமை அந்த அலுவலகங்களின் செயல் நடவடிக்கைகளுக்கு கவனத்தில்கொள்ளக்கூடியதாக தாக்கமளித்திருந்த போதிலும், அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக மாவட்ட செயலகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ஆரம்ப நிலையில் உத்தியோகத்தர்களின் பதவியுயர்வு நடைமுறை முறையான பிரகாரம் மேற்கொள்ளப்படாமை மற்றும் மாவட்ட செயலகத்தின் புதிய வாகனங்களுக்காக பொருந்தும் வகையில் அங்கீகரிக்கப்பட்ட சாரதி பதவிகளின் எண்ணிக்கை திருத்தம் செய்யப்படாதிருந்தமையினால் 03 சாரதிகளை உள்ளடக்கிய 12 ஊழியர்களின் மிகையொன்று காணப்பட்டது.